முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1540

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. அறம் காத்துவரும் அண்ணலே
அன்னதான ஞான வள்ளலே
வரம்தந்து மக்களை மீட்பதே
வையகத்தில் தன் அவதார நோக்கமென
2. நோக்கமென ஞானம் அருளி
நிலவுலகில் ஞானிகள் பூஜை தனை
ஆக்கமுடன் செய்த அனைவருக்கும்
ஆற்றலை பெருக்கும் ஆறுமுக அரங்கனே
3. அரங்கனே உமை போற்றி சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் முதல் நாள், 17.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
வரமென அரங்கன் உன் தர்மம்
வையகமெங்கும் வலம் வருதல் காண
4. தருகின்ற குணங்கள் உலகோர்க்குப் பெருகி
தயவான மக்கள் கூட்டம் உலகமெல்லாம் பரவ
பரவவே அரங்கன் உன் அவதார நோக்கம்
பழுதின்றி நிறைவேறும் ஆறுமுகன் என்னருளாலே
5. அருளாக அறமாக அரங்கன் உன்னுள்
ஆறுமுகன் யான் இருக்க
வரமாக நீ தருகின்ற தீட்சை மூலம்
வையகத்தில் உலகோர்க்கு சித்தி உண்டு
6. சித்தி தந்து இந்த பேருலகை
சித்தர்கள் ஆளும் ஞான பூமியாக
உத்தமமாய் மாற்றம் செய்ய நீ அவதாரம் எடுத்திருக்க
உன்நோக்கத்தை ஆறுமுகன் யான் நிறைவேற்றுவேன்

7. தேக்கமின்றி உலகமெல்லாம் உன்
தொண்டர் படைகளை பெருக்கி
தெய்வ நெறிகொண்ட ஞான ஆட்சியை
வையகமெங்கும் ஆறுமுகன் யான் உருவாக்குவேன்

8. ஆக்கமுடன் உலகோர் அடிபணிந்து
அரங்கன் அடிமையென முழு சரணாகதி
நாடிவந்து இணைந்து கொண்டால் போதும்
ஞான ஆட்சி ஞானிகளாட்சி சடுதி இந்த உலகமெல்லாம் நிறைவேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–